## பொருளடக்கம் :


- » கருட புராணம் என்றால் என்ன?
- » கருடனின் பிறப்பும், தோற்றமும்
- » மேன்மை பொருந்திய பிறவி எது?
- » சொர்க்கத்தை அடையக்கூடியவர்கள் யார்?
- » சுதந்திரம் இல்லாதவர்கள் யார்?
- » மகிழ்ச்சி எங்கு உள்ளது?
- » பாவத்தில் பங்கு கொள்ளக்கூடியவர்கள் யார்?
- » கடைசி வரை நம்முடன் பயணம் செய்வது எது?
- » தான, தர்மத்தின் பலன்கள் யாவை?
- » விருஷோற்சர்க்கம் என்கின்ற தானத்தை எப்போது செய்ய வேண்டும்?
- » உயிர்நீத்தலும், உருப்பெறுதலும்...
- » நரகம் ஓர் அறிமுகம்
- » என்னென்ன தவறுகள் செய்தால், என்னென்ன நரகங்களுக்கு செல்வார்கள்?
- » ஜீவாத்மாவிற்கு எந்த இடத்தில் மதிப்புகள், மரியாதைகள் கிடைக்கும்?
- » பிரேத ஜென்மத்தை யார் அடைவார்கள்?
- » உயிர்களின் இறப்பு என்பது எதன் அடிப்படையில் இருக்கும்?
- » எதனால் ஒருவர் நரகத்திலிருந்து துன்பத்தை அனுபவிக்கிறார்?
- » கரும சட்டம் என்றால் என்ன?
- » இறப்பின் காரணமும், மோட்சத்திற்கான பாதையும்
- » கர்ம காரியங்கள்
- » கர்ம நிகழ்வுகளை எவ்விதம் அனுசரிக்க வேண்டும்?
- » இறந்த பின்பு உடலின் நிலை யாது?
- » உடலின் அதிசய நிகழ்வு

» மனிதன் பிறப்பு நிலைகள்

» எமலோக பயணம்

» நவ சிரார்த்தம்

» ஈமக்கிரியைகள் எவ்விதம் செய்யப்பட வேண்டும்?

» தீர்த்த யாத்திரைகளும்... அதனுடைய பயன்களும்...

» முதன்மை கடமை எது?

» நித்திய சிரார்த்தம் என்றால் என்ன?

» மோட்சமும், சொர்க்கமும் ஒன்றா? வெவ்வேறா?

» என்னென்ன கர்மங்கள் செய்தால் புண்ணிய லோகத்தை அடைய இயலும்?

» யாருக்கெல்லாம் தீட்டு என்பது இல்லை?

» முன்ஜென்ம பாவ புண்ணியங்களின் விளைவுகளை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

» கருட புராணம் என்பது பறவைகளின் அரசனான கருடனுக்கு ஏற்பட்ட ஐயங்களை தீர்க்கும் பொருட்டு திருமால் எடுத்துரைக்கும் ஒரு அதி அற்புதமான புராணம் ஆகும். மனிதர்களாக பிறந்த அனைவரும் குறிப்பாக எதையும் பகுத்தறிந்து புரிந்துகொள்ளக்கூடிய உயிரினமாக இருப்பதாலும், பிறப்புகளில் உன்னதமான பிறப்பான மானுட பிறவியில் இருக்கக்கூடிய அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய புராணம் **கருட புராணம்** ஆகும்.

## கருட புராணம் என்றால் என்ன?

» அனைத்து வளங்களும் நிரம்பி இருக்கக்கூடிய மனிதர்கள் மட்டும் அல்லாத, கணக்கில் சொல்ல முடியாத அளவிற்கு உயிரினங்கள் வாழ்வதற்கான வாழிடத்தை அளித்திருக்கக்கூடிய இடம்தான் பூமி. பூமி உருவான பொழுதில் ஓரறிவு உயிரினங்கள் அதிகமாக இருந்த காலக்கட்டத்தில் இருந்து அடுத்தடுத்த காலங்களில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியினால் இன்று ஆறறிவு படைத்து, எதையும் பகுத்தறிந்து, நன்மை எது? தீமை எது? என அறிந்து செயல்படும் தன்மை கொண்டு சிறந்த உயிரினமாக இன்றளவும் மனித உயிரினம் இருந்து வருகின்றது.

» அணுவாக இருந்தாலும், அண்டமாக இருந்தாலும் அனைத்திலும் நிரம்பி இருக்கக்கூடிய பரம்பொருளால் உருவாக்கப்பட்ட உயிரினங்களில் தேவர்களுக்கு முன் இருக்கக்கூடிய பிறப்பு என்பது மனித பிறப்பு. இந்த

ஒரு காரணத்தினாலேயே மற்ற பிறப்புகளை காட்டிலும் மனித பிறப்பு என்பது அதி உன்னதமான பிறவியாக கருதப்படுகின்றது.

» இதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட நமது முன்னோர்கள் மற்றும் தவசீலர்கள் நமது தோற்றத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய பரம்பொருளிடம் இருந்து பலவிதமான ஆற்றல்களை பெற்றிருந்தனர். அதனால் எதிர்காலம் தொடர்பான செயல்பாடுகளை அறிந்து கொள்ள உதவும் வகையில் எந்தவொரு தொழில்நுட்ப உதவியுமின்றி அன்றே ஒவ்வொரு கிரகத்திற்கும் உள்ள தொலைவு, நிறம் மற்றும் அதனுடைய தன்மைகள் குறித்தும், அந்த ஒளியினால் உயிரினத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்தும் ஓலைச்சுவடிகளில் நமக்காக எழுதி அளித்து சென்றுள்ளனர்.

» நமது முன்னோர்கள் எதையும் முன்னோக்கியே சிந்தித்து கொண்டு இருப்பதினாலோ என்னவோ அவர்களை நாம் "முன்னோர்கள்" என்று அழைக்கின்றோம். ஏனெனில் இன்றைய நவீன யுகத்தில் நாம் வாழ்வதற்கு என்ன தேவை? என்பதை மட்டுமே இன்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

» ஆனால் அன்றோ பாரத பூமியில் பிறந்த நம்முடைய முன்னோர்கள் அனைவரும் ஒரு பிறவி பிறப்பதற்கான காரணம் என்ன? அதன் பிறப்பு என்பது எதன் அடிப்படையில் அமைகின்றது? எதனால் ஒரு பிறவி பலவித இன்னல்களையும், துன்பங்களையும் அனுபவித்து இந்த பூமியில் வாழ்கின்றது? என்பதை பற்றிய தகவல்களை அளித்துச் சென்றுள்ளனர்.

» பிறக்கின்ற அனைத்து பிறவிகளிலும் துன்பங்களை அனுபவிக்காமல் சில பிறவிகள் இன்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்கின்ற காரணத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, பலவிதமான தகவல்களையும் நமது முன்னோர்கள் நமக்கு அளித்துச் சென்றுள்ளனர்.

» அவர்கள் மேற்கொண்ட அந்த பயணத்தின் விளைவாக பரம்பொருளின் அருளோடும், நமக்கு இந்த பூமியில் வாழ்வது எப்படி? என்றும், தவறான செயல்களில் ஈடுபடுவதால் நமக்கு என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன? என்றும் விரிவாக எடுத்துரைக்கும் பொருட்டு கருடரின் உதவியோடு கருட புராணம் பலவிதமான ரகசியங்களையும் எடுத்துரைக்கின்றது.

» கருட புராணம் என்பது பூமியில் பிறந்து, ஆன்மாவுடன் உடலும் இணைந்து இருக்கும் பொழுது நாம் எவ்விதம் வாழ வேண்டும்? என்றும், அவ்விதமாக வாழும்போது நாம் செய்த கர்மாக்களின் அடிப்படையில் உடலை இழந்த ஆன்மா அனுபவிக்கக்கூடிய இன்ப, துன்பங்களை பற்றி எடுத்துரைக்கும் ஒரு வாழ்க்கை சாஸ்திரமாகும்.

» கருட புராணத்தை படிப்பதன் மூலமாகவோ அல்லது ஒருவர் வாசிக்க

இன்னொருவர் கேட்பதன் மூலமாகவோ இந்த பூமியில் நாம் எப்படி வாழ வேண்டும்? என்பதை பற்றி தெளிவாக அறிந்து கொள்ள இயலும். நாம் செய்யும் சிறு செயல்கள் எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்தும்? என்பதையும் இந்த புராணம் நமக்கு எடுத்துரைக்கும்.

» நமது பெற்றோர்களுக்கு நாம் எவ்விதம் சில கடமைகளை செய்ய வேண்டும்? என்றும், அந்த கடமைகளை செய்ய தவறினால் அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? என்பதை பற்றியும், நாம் முழுமையாக அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கக்கூடிய புராணம் கருட புராணம் ஆகும்.

» இந்த பூமியில் வாழும் வரை நம்மால் முடிந்த அளவு எப்படி இருக்க வேண்டும்? என்பதை பற்றிய தெளிவை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கருட புராணத்தை பற்றி அறிந்து கொள்ள நமது முதல் அடியை எடுத்து வைப்போம்.

» பதினெட்டு புராணங்களை தொகுத்துக் கொடுத்த வியாசரின் சீடராக இருக்கக்கூடியவர் சூதமாமுனிவர். அவர் தம்முடைய குருவிடமிருந்து பல விசேஷமான பாடங்களையும், புராணங்களையும் கேட்டு அறிந்து கொண்டுள்ளார். சூதமாமுனிவர் அடிக்கடி நைமிசாரண்ய வனத்திற்கு செல்லும்பொழுது அங்கிருந்த சீடர்களுக்கு தமது குருவின் உதவியால் அறிந்த பல விஷயங்களை அவர்களுக்கு எடுத்துரைப்பார்.

» அவ்விதம் அவர் எடுத்துரைக்கையில் சிலர் உயிரினங்களின் பிறப்பு, இறப்பு பற்றி நாங்கள் எதுவும் அறிந்ததில்லை. ஆகவே தாங்கள் எங்களுக்கு மரணத்திற்கு பின்பு நிகழும் நிகழ்வுகளை பற்றியும், ஒரு மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட இந்த பூவுலகில் வாழும்போது எவ்விதத்தில் வாழ வேண்டும்? என்பதை பற்றியும் எடுத்துரைக்க வேண்டும் என்று வினவினார்கள்.

» சீடர்களின் ஐயங்களை போக்குவது குருவின் கடமை மட்டுமல்லாது, ஒரு மகத்தான பணி அல்லவா?. அதன் பொருட்டு அவர் ஒரு உயிரினத்தின் பிறப்பு, இறப்பு மட்டுமல்லாது இறப்பிற்கு பின் அந்த உயிரினத்தின் ஆன்மா மேற்கொள்ளக்கூடிய பயணம் தொடர்பான நிகழ்வுகளை எடுத்துரைத்தார்.

» சூதமாமுனிவர், பூவுலகில் பிறந்து அனைத்து ஜீவராசிகளையும் காத்து கொண்டிருக்கக்கூடிய திருமாலாகிய நாராயணன் ஒரு சமயத்தில் கருடனுக்கு எடுத்துரைத்த கருட புராண விளக்கத்தை உங்களுக்கு நான் கூறுகிறேன் அதை கவனத்துடனும், கருத்துடனும் அனைவரும் கேட்பீர்களாக...!! என்று கூறினார். மனிதன் வாழும்போது செய்யும் செயல்களின் அடிப்படையிலேயே எமலோகத்தில் உள்ள ஆன்மாவிற்கு சில விதிமுறைகளின் அடிப்படையில் அதற்குண்டான தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன.

» அதாவது, ஒவ்வொரு நாட்டிலும் அவ்வூரில் வாழும் மக்களுக்கு ஏற்ப ஒவ்வொரு